**மெதிரிகிரிய பிரதேச சபை - 2022**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மெதிரிகிரிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மெதிரிகிரிய பிரதேச சபையின் 2022 திசெம்பா 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்டதரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- ந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்
### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் மெதிரிகிரிய மக்கள் வங்கியில், நடைமுறைக் கணக்குடன் பேணிச் செல்லும் சேமிப்புக் கணக்கின் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 606,659 ஆன மற்றும் கடந்த ஆண்டிற்குரிய ரூபா 365,364 ஆன சேமிப்பு வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டில் வருமானத்திற்கு எடுத்ததென. | வருமான வட்டியை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டும் |
| (ஆ) | இலங்கை வங்கியில் பேணிச் செல்லும் சேமிப்புக் கணக்கிற்கு உரிய மீளாய்வாண்டில் கிடைத்துள்ள ரூபா 52,346 மற்றும் கடந்த ஆண்டுகளிற்காக கிடைத்திருந்த ரூபா 50,801 ஆன வட்டி வருமானத்தை நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | இரண்டு சுடுகாடுகளின் எல்லை வேலி நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்து களஞ்சியத்தில் இருந்த ரூபா 335,466 | ஜர்னல் குறிப்பு மூலம் நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு | நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | ஆன உபகரண இருப்பின் பெறுதியை நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செய்துள்ளதென. | வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிற்கு கி.கி 27627 ஆன எஞ்சிய சேதனப் பசளை இருப்பின் பெறுமதி ரூபா 690,675 மற்றும் பூர்த்தி அடையாத பசளைகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | எஞ்சிய இருப்பு பெறுமதி ரூபா 690,675 ஜர்னல் இலக்கம் 03 ஊடாக கணக்ககீடு செய்ததாக மற்றும் பூர்த்தியாகாத இருப்பு பெறுமதியை இனங்கண்டு எதிர்காலத்தில் சரிசெய்வதென. | எஞ்சிய இருப்பை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | களஞ்சியத்தில் இருந்த ரூபா 260,000 பெறுமதியான 04 சில்லுகளை எஞ்சிய இருப்பிற்கு உட்படுத்தி இருக்கவில்லை. | ஜர்னல் குறிப்பு மூலம் சரி செய்துள்ளதென. | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 1,060,562 ஆன நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தை நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்திருக்கவில்லை. | சரி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதென. | வருமானத்தை சரியாக இனங்காண வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிற்கு வியாபார வரி பதிவேடு பிரகாரம் நிலுவை வியாபார வரி வரமானம் ரூபா 2,112,840 ஆன பொதும், நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அவ் வருமானம் ரூபா 2,014,240 ஆனதில் ரூபா 98,600 ஆன வத்தியாசம் ஆனது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பத என. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணை ஊடாக காண்பிக்கப்பட்டள்ள மீதியை இணக்கம் செய்ய வேண்டும். |
| (ஆ) | இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் பதிவெட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய இயந்திர வாடகை வருமானம் ரூபா 4,053,985 ஆன போதும், நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அவ் வருமானம் ரூபா 2,859,460 ஆனதில் ரூபா 1,194,525 ஆன வித்தியாசம் ஆனது. | பரிசோதித்து சரியான மீதிகளை சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பது என. | -மேற்படி- |

### 1.6.3 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிற்கு் ரூபா 55,792,954 ஆன 02 கணக்கு மீதிகளளை உறுதிப்படுத்தல்கள் மற்றம் கடன்படுனர் கடன்கொடுனர் பதிவெடுகள் சமர்ப்பிக்காத காரணத்தால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | எதிர்காலத்தில் மீதி உறுதிப்பாடுகளை சமர்ப்பிக்க மற்றும் இணக்கம் நடவடிக்கை எடுக்கப்படவது என. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,579,674 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம ரூபா 7,815,748 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்
### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சமர்ப்பிக்கப்ட்ட தகவல்கள் பிரகாரம்மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட் ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட் ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,384,810 | 5,117,490 | 4,009,761 | 8,072,203 | 3,364,700 | 3,235,958 | 3,368,879 | 3,852,693 |
| (ii) | வாடகை | 12,382,840 | 7,231,911 | 6,446,113 | 4,087,422 | 18,932,900 | 13,421,134 | 11,012,262 | 3,162,773 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 357,250 | 203,784 | 211,784 | - | 375,200 | 163,236 | 191,236 | 8,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 33,505,000 | 32,771,047 | 25,414,963 | 28,588,718 | 20,882,900 | 24,781,561 | 43,947,230 | 15,122,894 |
| | | 49,629,900 | 45,324,232 | 36,082,621 | 40,748,343 | 43,555,700 | 41,601,889 | 58,519,607 | 22,146,360 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் மீதான அவதானிப்புக்கள் பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வாடகை** | | |
| | நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் நிலவிவரும் ரூபா 371,456 ஆன நிலுவை இறைச்சிக் கடை, மீன் கடை, வாராந்த சந்தை, வாகன தரிப்பிட வருமானத்தை தீர்த்துக் கொள்ள சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரு பகுதியை பதிவழிக்க உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரியுள்ளதாகவும், ரூபா 79,600 தொகை அறவிட முடியுமானதாக. | நிலுவை வருமானம் அறவிட கவனம் செலுத்த வேண்டும். |
| **(ஆ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | கடந்த ஆண்டு முதல் நிலவிவரும் நிலுவை வியாபார வரி வருமானம் ரூபா 1,422,940 ஆன போதும், அந்த நிலுவையிலிருந்து மீளாய்வாண்டினுள் ரூபா 520,680 வருமானம் மாத்திரம் திரட்டப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வியாபார வரி அறவிட தேவையான நடவக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சமர்பிக்கப்பட்ட அறிக்கை பிரகாரம் மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2022 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 23,931,438 தொகை மற்றும் முத்திரை கட்டண வருமானம் ரூபா 4,157,280 ஆனது. | - மேற்படி - | வருமானத்தை அழைபித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்ராட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

பிரதேசசபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனை சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **உப விதி** | | |
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் உப விதி விதிக்கப்பட வேண்டிய, குடி நீர் விற்பனை மற்றும் வாகன இயந்திர உபகரணங்களிற்கான வாடகையை அறவிடல் பொன்ற பிரதான 02 விடயங்களை | விதிக்கப்படாத உப விதிகள் தொடர்பாக உள்ளுராட்சி சட்டத்தரனி ஊடாக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு | தேவையான உப விதகள் விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்வதற்காக உப விதிகள் விதிக்கப்ட்டிருக்கவில்லை. | வருவதுடன், அதன் பிரகாரம் முன நடவடிக்கை மேற்கொள்வதாக. | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மெதிரிகிரிய பிரதேச சபைக்கு சொந்தமான யுதகனாவ சுடுகாட்டு காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்து இருக்கவில்லை. | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | காணிகளின் பெறுமதிகளை கணக்கீடு செய்ய வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கெப் வண்டியொன்று 21 ஆண்டுகளிற்கு அதிக காலமாக சபை வளவில் விளைவற்று காணப்பட்டது. | கெப் வண்டியை பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகளை செய்து தருமாறு கோரியுள்ளதென. | பராதீனத்திற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபை வளவில 11 ஆண்டுகளிற்கு அதிக காலமாக 02 நீர் பவுசர்கள் விளைவற்று துருப்பிடித்துக் காணப்பட்டன. | மஹவெலி தங்குமிட வியாபார முகாமைத்துவ நிறுவனம் ‘‘டீ’’ வலயத்திற்கு ஒப்படைக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | பராதீனத்திற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அரசிமா தயாரிப்பு மத்திய நிலையத்தின் காணப்படும் ரூபா 142,500 பெறுமதியான 03 இயந்திர உபகரணங்கள் 11 ஆண்டுகளிற்கு அதிக காலமாக விளைவற்று காணப்பட்டன. | இந்த மத்திய நிலையத்தை கொள்வனவு செய்ய எவரும் முனவராத காரணத்தால் அவ்வாறு நிலவுவதாக. | பராதீனத்திற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பிரதேச சபைக்காக ரூபா 125,000 செலவில் நிர்மாணித்திருந்த வாகன சேவை நிலையமொன்று 2010 ஆண்டு முதல் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாது விளைவற்று நிலவியது | தேவையான மனிதவள இல்லாததால் விளைவற்று காணப்படுவதாக. | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் சபை அதிகார எல்லையில் 04 இலத்திரனியல் நூலகங்களை ஆரம்பிப்பதற்காக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 1,330,776 ஆன உபகரணங்கள் மற்றும் ரூபா 14,935,994 ஆன 04 | தேவையான மனிதவள இல்லாததால் விளைவற்று காணப்படுவதாக. | வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலத்திரனியல் நூலக கட்டிடங்கள் கருத்திட்டத்தை செயற்படுத்துவ தொடர்பான நடைமுறை சிக்கல் காரணமாக விளைவற்று காணப்பட்டன. | | |

### .3.4 மனிதவள முகாமைத்தவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 08 பதவிப் பெயர்களின் கீழ் 10 வெற்றிடங்களும், 02 பெயர்களின் கீழ் 02 மிகையும் காண்ப்பட்டன. | அப் பதவிகளிற்காக உத்தியோகத்தர்களை பெற்றுத் தருமாறு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதென. | குறித்த தரப்பினரகளின் கவனத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |